தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 124/பேரூ/2021

நாள் 14.09.2022

திரு. M. கணேசன்
சக்கம்பட்டி, தேனி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆண்டிபட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம் ... எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சிக்குட்பட்ட 32/15, திருவள்ளுவர் காலனி மேற்குப் பகுதி, சக்கம்பட்டி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. M. கணேசன் என்பவரின் 06.08.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.08.2022ல் பெறப்பட்டு, 124/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சிக்குட்பட்ட 32/15, திருவள்ளுவர் காலனி மேற்குப் பகுதி, சக்கம்பட்டி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. M. கணேசன் தமது 06.08.2022 நாளிட்ட புகார் மனுவில் சக்கம்பட்டியில், திருவள்ளுவர் காலனியின் மேற்கு புறத்தில் உள்ள பொது தெரு நடைபாதையை ஒருசிலர் ஆக்கிரமித்து காம்பவுண்டு சுவர்களையும், பாத்ரூம்களையும் கட்டியுள்ளனர். எவ்வாறு அவர்கள் பொதுப்பாதையை ஆச்கிரமித்து கட்டுகிறார்கள் என்று பலமுறை ஆண்டிபட்டி பேரூராட்சிக்கு பதிவுத் தபால்கள் மூலம் புகார்கள் அனுப்பியும் பேரூராட்சி நிர்வாகம் கண்டுகொள்ளாமல் ஆக்கிரமிப்பாளர்களுக்கு சாதகமாக உதவியாக இருப்பதுபோல் தெரியவருகிறது என்றும், இதுகுறித்து மாவட்ட ஆட்சியர், மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு ஆகிய

இடங்களிலிருந்து ஆக்கிரமிப்புகளை அகற்றிட உத்தரவு வந்தும் இதுவரை ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் கண்டுகொள்ளவில்லை என்பதால், இம்முறைமன்ற நடுவம் இதுகுறித்து விசாரித்து தீர்ப்பு வழங்கிடுமாறு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார். மனுதாரர் தனது புகார் குறித்து உரிய ஆதார ஆவணங்களையும் புகார் மனுவுடன் இணைத்தனுப்பியுள்ளார்.

2. ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 06.09.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெறும் நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 02.09.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டும், மின்னஞ்சல் மற்றும் தொலைவழிச் செய்தி மூலமும் கேட்டுக்கொள்ளப்பட்டனர். முறையீட்டு மனுதாரர் 06.9.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "ஆண்டிபட்டியில், சக்கம்பட்டி திருவள்ளுவர் காலனியில் உள்ள பொது தெரு நடைபாதையை அத்தெருவில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் ஆக்கிரமித்து காம்பவுண்டு சுவர், பாத்ரூம் போன்றவற்றை கட்டியுள்ளனர். பொதுப்பாதை ஆக்கிரமிப்பு குறித்து ஆண்டிபட்டி பேரூராட்சிக்கு பலமுறை புகார் மனுக்கள் அனுப்பியும் பேரூராட்சி நிர்வாகம் அதனை கண்டுகொள்ளாமல், ஆக்கிரமிப்புக்கு உதவியாக இருந்து வருகிறது. எனவே, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆணையிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தினைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இம்முறைமன்றத்திற்கு என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 6.8.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல்விளக்கமாக எடுத்துக்கொள்ளுமாறும் இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. கா. சின்னச்சாமி பாண்டியன் 6.9.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "தேனி மாவட்டம், ஆண்டிபட்டி சர்வே எண்.2198ல் திருவள்ளுவர் காலனி மேற்குப் பகுதியில் உள்ள பொது தெரு நடைபாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் குறித்தும், நில அளவை செய்வது குறித்தும் கடந்த 14.10.2020, 26.2.2021, 15.11.2021 ஆகிய நாட்களிலும் மேலும் 5.4.2022 மற்றும் 1.9.2022லும் ஆண்டிபட்டி வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வட்டாட்சியரின் பதில் இன்னமும் பெறப்படவில்லை. பதில் பெறப்பட்டபின்னர், நில அளவை செய்து, ஆக்கிரமிப்புகள் இருக்கும்பட்சத்தில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு 15 நாட்கள் கால அவகாசத்துடன் நோட்டீஸ் அளித்து, பின்னர் ஒரு மாத காலத்திற்குள் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பாக எனது 6.9.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படியும் இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 6.9.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் ஆண்டிபட்டி பேரூராட்சி சர்வே எண்.2198 திருவள்ளுவர் காலனி

மேற்குப் பகுதியிலுள்ள பொது தெரு நடைபாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஆண்டிபட்டி வட்டாட்சியருக்கு நில அளவை செய்துகொடுக்குமாறு பலமுறை கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கடந்த இரு ஆண்டுகள் கொரோனா காலகட்டம் ஆனதால் நில அளவைப் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை. மேலும், மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீடுகள் சுமார் **30** ஆண்டுகளுக்கு முன் வடிகாலுக்கு உட்புறத்தில் கட்டப்பட்டுள்ளன. சாலை மற்றும் வடிகால் மீது எந்த கட்டிடங்களும் கட்டப்படவில்லை. அதனால் ஆக்கிரமிப்புகள் உள்ளதா என்பதை கண்டறிய இயலவில்லை என்றும், பொது தெரு நடைபாதையை நில அளவை செய்து ஆக்கிரமிப்புகள் இருப்பின் அதன் பகுதியினை குறியீடு செய்து தருமாறு வட்டாட்சியர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதால், அளவீடு செய்து அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், ஆக்கிரமிப்புகள் இருக்கும்பட்சத்தில் உடனடியாக ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்று தெரிவித்துள்ளார்.

5. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம் மற்றும் அவரது **6.9.2022** நாளிட்ட விளக்க அறிக்கை ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- சக்கம்பட்டியில் திருவள்ளுவர் காலனியின் மேற்குப் புறத்தில் உள்ள பொது நடைபாதையை ஆக்கிரமித்து காம்பவுண்டு சுவர் மற்றும் பாத்ரூம்களையும் ஒருசிலர் கட்டியுள்ளார்கள் என்ற மனுதாரரின் புகார் கடந்த **2019** முதலே பேரூராட்சியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது மனுதாரரின் ஆதார ஆவணங்களிலிருந்து தெளிவாகிறது.
- மனுதாரரின் கோரிக்கை ஆண்டிபட்டி பேரூராட்சியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள போதிலும், கடந்த இரண்டு ஆண்டு காலமாக கொரோனா தொற்று பரவியிருந்ததினால், ஆண்டிபட்டி வட்டாட்சியரால் நில அளவை செய்து அத்துமால் செய்திட இயலாத நிலை ஏற்பட்டதாகவும், வட்டாட்சியர் பேரூராட்சி நிர்வாகத்தினால் பலமுறை இதுகுறித்து நினைவூட்டப்பட்டுள்ளதும், நில அளவை மேற்கொள்ளப்பட்டவுடன், ஆக்கிரமிப்புகள் இருக்கும்பட்சத்தில் வட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில், ஆக்கிரமிப்பாளர்களுக்கு **15** நாட்கள் அறிவிப்பு கொடுத்து அதன் பின்னர் ஒருமாத காலத்திற்குள், ஆக்கிரமிப்புகள் முற்றிலும் அகற்றப்படும் என்று ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மனுதாரரால் பொது பாதையில் தனிநபர் பாத்ரூம் கட்டிவருவதாகவும், காம்பவுண்டு சுவர் எழுப்பப்பட்டுள்ளதாகவும் முன்வைக்கப்பட்டுள்ள புகார் மீது பேரூராட்சி நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, முதலில் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் ஆக்கிரமிப்புகள் ஏதும் உள்ளனவா என்பதை வரி வசூலர் மற்றும் சுகாதார ஆய்வாளர் மூலமும், செயல் அலுவலர் தானே தல ஆய்வு செய்தும் உறுதி செய்திருக்கலாம். மேலும், பேரூராட்சி ஆவணங்களின்

அடிப்படையில், மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள தெருவின் நீள அகலம் குறித்த குறிப்புகளை ஆய்வு மேற்கொண்டிருப்பின் அதன் அடிப்படையிலும் ஆக்கிரமிப்புகள் உள்ளனவா என்பதையும் உறுதி செய்திருக்க முடியும்.

- மாறாக மனுதாரர் தனது புகார் குறித்து புகைப்பட ஆதாரங்களையோ, ஆவணங்களையோ தாக்கல் செய்திடாத நிலையில், ஆக்கிரமிப்புகள் உள்ளது குறித்து வட்டாட்சியருக்கு நில அளவை மேற்கொண்டு அத்துமால் செய்துதருமாறு பேரூராட்சி நிர்வாகம் கடிதம் எழுதிவிட்டு, காலம் கடத்திவருவது ஏற்றுக்கொள்ள இயலாத கூற்றாக உள்ளது. மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் அளித்துள்ள பின்னரும், வட்டாட்சியரிடமிருந்து நில அளவை மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகளோ அல்லது குறித்த காலத்திற்குள் நிலஅளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட பேரூராட்சியின் உத்தரவாதமோ அளிக்கப்படாத நிலையில், சாதாரண பிரச்சனைகளுக்குக்கூட ஆண்டிபட்டி பேரூராட்சி நிர்வாகம் முறையான நடவடிக்கைகளை குறித்த காலத்திற்குள் மேற்கொள்ளாமல் தேவையற்ற காலதாமதங்களை ஏற்படுத்தியுள்ளது தெளிவாகிறது. இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.
- பொதுப்பாதை ஆக்கிரமிப்புகள், பொதுச் சுகாதாரம், தெருவிளக்கு, சாலை வசதி ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளித்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டிய பேரூராட்சி நிர்வாகம், தல ஆய்வு மேற்கொண்டு முதற்கண் புகாரின் உண்மைத் தன்மையை உறுதி செய்து நடவடிக்கை மேற்கொள்ளாமல் மனுதாரரின் புகார் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், கொரோனா பரவல் காரணமாக உடனடியாக ஆக்கிரமிப்புப் பகுதி ஆண்டிபட்டி வட்டாட்சியரால் நில அளவை செய்து அத்துமால் செய்திட இயலவில்லை எனவும், மனுதாரரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தெரு அளவீடு செய்து ஆக்கிரமிப்புகளை அகற்றிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டு, மனுதாரரால் முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு அளிக்கப்பட்ட மனுவிற்கு **28.2.2021**ல் தவறான பதில் அளித்துள்ளது மிகவும் கண்டிக்கத்தக்கது.
- பேரூராட்சியின் பணிகளை ஆய்வு மேற்கொள்ளவேண்டிய பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி மண்டலமும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமல், கடிதப் போக்குவரத்தில் மட்டுமே காலம்தாழ்த்தி வந்துள்ளதைத் தவிர ஆக்கபூர்வமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அறியமுடியவில்லை. வட்டாட்சியரும் ஆண்டிபட்டியிலேயே உள்ள நிலையில், இதுகுறித்து நேரடியாக வட்டாட்சியரை பேரூராட்சி செயல் அலுவலர் நேரில் சென்று வற்புறுத்தி நடவடிக்கை மேற்கொண்டிருந்தால், இதுநாள் வரை இப்புகார் நீட்டித்திருந்திட வாய்ப்பெழுந்திருக்காது என்றே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.
- மனுதாரரின் இப்புகார் தேனி மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கு கொணரப்பட்ட பின்னரும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி மண்டலம் வருவாய்த் துறை ஆவணங்களின் அடிப்படையில் பாதையினை அளவீடு செய்து உரிய விதிமுறைகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொண்டு, எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தினை மனுதாரருக்கு தெரிவித்துவிட்டு, தனது அலுவலகத்திற்கும் சமர்ப்பித்திட அறிவுறுத்தியுள்ளார்.

- இதுபோன்ற கால விரயங்களினால் சம்மந்தப்பட்ட பேரூராட்சி நிர்வாகத்தின் மீது பொதுமக்களுக்கு உள்ள நம்பிக்கை உறுதியற்ற நிலைக்கு தள்ளப்படுகிறது. மனுதாரரின் புகார் குறித்து பேரூராட்சி நிர்வாகம் களப்பணியாளர்களின் அறிக்கையினைப் பெற்று அதன்அடிப்படையில் செயல் அலுவலர் தல ஆய்வு மேற்கொண்டு உடனே நடவடிக்கை எடுத்திருந்தால் தேவையற்ற காலதாமதங்கள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

**6.** ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள விளக்க அறிக்கையில் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் **30** ஆண்டுகளுக்கு மேலாக கட்டப்பட்டுள்ள வீடுகள் வடிகாலுக்கு உட்புறத்தில் கட்டப்பட்டுள்ளவை என்றும், வடிகால் மீது எந்த கட்டுமானங்களும் எழுப்பப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மனுதாரரின் புகார் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், ஆக்கிரமிப்புகள் குறித்து நில அளவை மேற்கொண்டு அத்துமால் செய்துதர ஆண்டிபட்டி வட்டாட்சியர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளதும் முரண்பட்டவையாகும். இப்புகார் எளிதில் தீர்க்கப்பட்டிருக்கவேண்டிய மிகச் சாதாரணமான அதே வேளையில் பேரூராட்சியால் உடனடியாக களையப்பட்டிருக்கவேண்டிய புகாராக இருந்தும்கூட இதுவரை களையப்படாமல் நிலுவையில் உள்ளது. எனவே, ஆண்டிபட்டி வட்டாட்சியரின் அறிக்கையினை பெற்று, ஆக்கிரமிப்புகள் இருப்பது உறுதியானால் ஒருமாத காலத்திற்குள் உரிய விதிமுறைகளின்படி ஆக்கிரமிப்புகளை அகற்றிட உரிய துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இரண்டாண்டுகளுக்கு மேலாக நிலுவையில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றம் குறித்த புகார் மீது நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரரின் புகாரை தீர்த்துவைத்திட ஏதுவாக ஆண்டிபட்டி வட்டாட்சியர் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை அளித்திடுமாறும் ஆண்டிபட்டி வட்டாட்சியரையும் இம்முறைமன்ற நடுவம் கேட்டுக்கொள்கிறது. மேலும், நில அளவைக்கு தாமதம் ஏற்பட்டால் பகுதி கோட்டாட்சியர் நடவடிக்கை எடுத்திடவும், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கவனத்திற்கு எடுத்துச்செல்லவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி மண்டலம் மற்றும் ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**2022**ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் **14**–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. M. கணேசன், த/பெ மொட்டையாண்டி,
கதவு எண்.**32/15** திருவள்ளுவர் காலனி, சக்கம்பட்டி, ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்.
செயல் அலுவலர், ஆண்டிபட்டி பேரூராட்சி, ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்–**625 512**
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், தேனி மண்டலம், தேனி
மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம், தேனி.

மாவட்ட வருவாய் அலுவலர், தேனி மாவட்டம், தேனி
கோட்டாட்சியர், பெரியகுளம், தேனி மாவட்டம்.
வட்டாட்சியர், ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்–625 512

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

19/9/22

செயலர்

15.9.22